## கவனிக்க வேண்டிய குறிப்புகள்

1. இத்தேர்வுக்கு கட்டணம் ஏதும் இல்லை.
2. தேர்வுகள் தமிழில் மட்டும் நடத்தப்படும்.
3. தேர்வில் கலந்து கொள்ள விரும்புகிறவர்கள் அனைவரும் கண்டிப்பாக நுழைவுச் சீட்டு (Hall Ticket) பெற்றிருத்தல் வேண்டும். **நுழைவுச் சீட்டு இணையதளத்தில் அக்டோபர் முதலாம் தேதி முதல் பெற்றுக்கொள்ளலாம்.** திருமறை தேர்வின் பாடத்திட்டத்தினை செப்டம்பர் முதலாம் தேதி முதல் இணை பேராலயத்தின் இணையதளத்தில் பார்க்கலாம்.

   வாய்மொழித் தேர்வில் 60 சதவீதமும் எழுத்துத் தேர்வு எழுதுவோர் 50% மதிப்பெண்களும் பெற்றால் தான் பரிசு பெறும் தகுதியுடையவராகக் கருதப்படுவர்.
4. தேர்வு முடிவுகள் டிசம்பர் 25 முதல் இணைபேராலயத்தின் இணையதளம் **www.stpatrickscocathedral.org** மூலம் அறிவிக்கப்படும்.
5. **பரிசுகளை பிப்ரவரி கடைசி ஞாயிற்றுக்கிழமைக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.**
6. தேர்வில் பரிசு பெற்றவர்கள் வேதாகமப் பரிசினை பெற்றுக்கொள்ள விரும்பும் இடங்களை நுழைவுச்சீட்டில் (Hall Ticket) இணையதளத்தில் குறிப்பிட வேண்டும்.

   பள்ளிகள் மூலம், சபை மூலம் வருகை தந்து தேர்வு எழுதியவர்களுக்கான பரிசுகளை மொத்தமாக பொறுப்பானவர்கள் 1-1-2025 முதல் பெற்றுச் செல்ல வேண்டும். அன்று நேரில் வந்து பரிசுகளை பெறாதவர்கள் தொடர்ந்து வரும் ஞாயிற்று கிழமைகளில் மட்டும் காலை 11.00 முதல் 1.00 மணி வரை தூய பேட்ரிக் இணை போராலயத்தில் நுழைவு சீட்டினை கொண்டு வந்து பரிசுகளை பெற்றுக் கொள்ளலாம்.
7. விடைத்தாள்கள் இணை பேராலயத்தில் இருந்து வழங்கப்படும்.
8. தேர்வு எழுதுபவர்கள் எழுதும் அட்டை வைத்திருத்தல் அவசியம்.
9. தேர்வுக்கான வினாத்தாள் அமைப்பு கீழ்க்கண்டவாறு இருக்கும்.

   I Part-A மனப்பாடம் - 50 மதிப்பெண்கள்
   II Part-B கேள்வி பதில் - 50 மதிப்பெண்கள்
   1. கோடிட்ட இடங்களை நிரப்புக. 2. ஒரே வார்த்தையில் விடையளி
   3. பொருத்தி எழுதுக. 4. குறுகிய விடையளி 5. விரிவான விடையளி.

### தேர்வு பொறுப்பாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| திருமதி. R. ஞானசீலி | 99528 64661 | திருமதி. J. பவிதா | 90257 10024 |
| திரு. V. பிரின்ஸ் | 94896 90614 | திரு. J. முத்து மாணிக்கம் | 94431 87333 |
| திரு. J. சாமுவேல் | 98944 73999 | திரு. S. அருள்வாசன் | 90475 94471 |
| திரு. K. ஜோசுவா ஞானராஜ் | 93633 63339 | திரு. J. ஆபிரகாம் ராஜ்குமார் | 94430 85998 |
| திரு. H. மோகன் | 94436 88969 | திருமதி. ஜேஸ்மின் டால்டன் | 94875 36333 |

திரு. P.A. ஜவஹர்ராஜ் 87540 23594

தென்னிந்திய திருச்சபை - தூத்துக்குடி - நாசரேத் திருமண்டலம்

**தூத்துக்குடி சேகரம்**

# தூய பேட்ரிக் இணைப்பேராலயம், தூத்துக்குடி

www.stpatrickscocathedral.org

# புத்தாண்டு பரிசு திருமறைத் தேர்வு-2025

**"உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு என் கண்களைத் திறந்தருளும்" சங்கீதம் 119:18**

*கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!*

திருமறை நாயகனாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவரையும் அன்போடு வாழ்த்துகிறோம். இந்த உலகிலே விலையுயர்ந்த புத்தகமாகிய பரிசுத்த வேதாகமத்தை கர்த்தர் நமக்கு தந்திருக்கிறார். இந்த வேத வாக்கியங்களை கற்றுக்கொள்ளும்படி ஆண்டவர் நமக்கு கொடுத்த இந்த நல்ல வாய்ப்பிற்காக ஆண்டவருக்கு நாம் ஸ்தோத்திரம் செலுத்துவோம். கடந்த 1964ஆம் ஆண்டு முதல் 60 ஆண்டுகளாக இந்த திருமறைத்தேர்வு பரிசுத்த பேட்ரிக் இணைப் பேராலயத்தில் நடைபெற்று வருகிறது. கடந்த காலங்களில் நீங்கள் உற்சாகமாய் கலந்து கொண்டதுபோல இந்த ஆண்டிலும் நீங்கள் கலந்துகொள்ள உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தேர்வைக் குறித்த விபரங்களை www.stpatrickscocathedral.org என்ற இணைய தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். தேர்வில் பங்கு பெறுவோர் **1.10.2024** முதல் Online-ல் Hall Ticket பெற்றுக்கொள்ளலாம். இந்தத் தேர்வில் பெற்றி பெறுபவர்களுக்கு 01.01.2025 அன்று மாலை 6.30 மணிக்கு தூய பேட்ரிக் இணைப் பேராலயத்தில் வைத்து பரிசுகள் வழங்கப்படும். தேர்விற்காக ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்! வெற்றி பெறுங்கள்!

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

"அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்" சங்கீதம் 119:72

கிறிஸ்துவின் பணியில்

**திரு. K. எபனேசர் சாம்**
சபை ஊழியர்

**திரு. D. மாற்கு டைட்டஸ்**
திருமண்டல சபை ஊழியர்

**Rev. T. ஆனந்தமணி அண்டன்ராஜ்**
**Rev. M. காலேப் மேன்சிங்**
**Rev. R.A.J. செல்வின் துரை**
திருப்பணிவிடையாளர்கள்

27.08.2024
தூத்துக்குடி

| வகுப்பு/Class | தேர்வு முறை | மனப்பாடம் | மனப்பாட வசனங்கள் | கேள்வி - பதில் | தேர்வு நாள், நேரம் | தேர்வு நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| Pre K.G. | வாய்மொழி | சங்கீதம் 23 | 6 | இல்லை | 09.11.2024 சனிக்கிழமை காலை 10 மணி மற்றும் 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11 to 1 மணி | தூய பேட்ரிக்ஸ் இணைப்பேராலயம், வடக்கூர், தூத்துக்குடி. |
| L.K.G. | " | சங்கீதம் 121, 128 | 14 | | | |
| U.K.G | " | சங்கீதம் 67, 121 | 15 | | | |
| Std I | " | சங்கீதம் 1, 103 | 28 | | | |
| Std II | " | சங்கீதம் 8, 15, 103 | 36 | | | |
| Std III | எழுத்து | சங்கீதம் 67, 91, 139 | 47 | இல்லை | 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 to 4 மணி | தூய பேட்ரிக்ஸ் இணைப்பேராலயம், வடக்கூர், தூத்துக்குடி. |
| Std IV | " | சங்கீதம் 100, மத்தேயு 5 | 53 | மாற்கு 1 - 10 | | |
| Std V | " | சங்கீதம் 150, மத்தேயு 5 | 54 | எஸ்தர் 1-10 | | |
| Std VI | " | சங்கீதம் 112, நீதிமொழிகள் 10, 11 | 73 | 1சாமுவேல் 1-10 | 17.11.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 to 4 மணி | கால்டுவெல் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி. |
| Std VII | " | நீதிமொழிகள் 24, 25, 26 | 90 | எஸ்றா 4-10 | | |
| Std VIII | " | சங்கீதம் 90, 91, 92 நீதிமொழிகள் 30,31, | 112 | 1இராஜாக்கள் 1-11 | | |
| Std IX | " | சங்கீதம் 51, 24; நீதிமொழிகள் 30, எபிரேயர் 4,5,6 | 112 | எஸ்தர் 1-10, யோனா 1-4 | 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 to 4.30 மணி | கால்டுவெல் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி. |
| Std X | " | சங்கீதம் 24,32,34,39,40 1கொரிந்தியர் 13; மத்தேயு 5 | 139 | நியாயாதிபதிகள் 1-16 | | |
| Std XI | " | மத்தேயு 5,6; நீதிமொழிகள் 10, 11 | 145 | தானியேல் 1 - 12 | | |
| XII | " | நீதிமொழிகள் 10,11,; எபேசியர் 4,5,6 | 152 | மத்தேயு 1-10 | | |
| College & Training Classes | " | சங்கீதம் 119:1-64; 139, 144; 1கொரிந்தியர் 13; பிலிப்பியர் 1,2 | 175 | அப்போஸ்தலர் 1 - 28 | 01.12.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 to 4.30 மணி | கால்டுவெல் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி. |
| Below 50 Years | " | எபிரேயர் 1-10 | 209 | யோவான் 1 - 21 | | |
| Age 50 - 60 | " | சங்கீதம் 91, 100; எபேசியர் 4,5,6; எபிரேயர் 11,12,13 | 204 | 2இராஜாக்கள் 1 - 25 | | |
| Above 60 Years | " | சங்கீதம் 119:105-176; யாக்கோபு 1-5 | 180 | லூக்கா 1 - 24 | | |

**பரிசுகள் 1.1.2025 அன்று மாலை 6.30 மணிக்கு தூய பேட்ரிக்ஸ் இணைப்பேராலயத்தில் வைத்து வழங்கப்படும்.**